# சிறார் நாடகங்கள் வழி வெளிப்படும் விழுமியங்கள்

முனைவர். ஜோ. சூசை ஜெஸிந்தா மெர்சி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 18.

44

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான இன்றியமையாத விழுமியங்களைத் தமிழின் தொன்மையான கலைவடிவமான நாடகம் தம் பாத்திரங்கள் வழியே வெளிப்படுத்தி வருகின்றது. நல்ல பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் வீரத்தையும், விவேகத்தையும் இளமையில் எளிதாகக் குழந்தைகளுக்குக் கற்றுத்தரும் குழந்தை இலக்கியத்தில் நாடகங்கள் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றன. சிறந்த குழந்தை இலக்கியப் படைப்பாளரான பெரியசாமித் தூரன் குழந்தைகளைப் பண்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தன் நாடகங்களில் விழுமியக் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். இதனை ஆய்வு செய்யும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

சிறுவர் நாடகங்கள், பெரியசாமித் தூரன், சிறுவர்களுக்கான விழுமியங்கள், தியாக உணர்வு, வீரம், நாட்டுப்பற்று, பொருளாசையின்மை, கல்வி, முடிவுரை.

**முன்னுரை**

தமிழின் தொன்மையான கலைவடிவமான நாடகம் ‘கலைகளின் அரசி’ என்று அழைக்கப்படுகிறது. இயலும் இசையும் கலந்து கதையைத் தழுவி நடித்துக் காட்டப்படும் நாடகம் நாட்டின் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பிரதிபலித்துக் காட்டும் சிறப்புடையது. தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்த நாடகத்தமிழ் என்னும் பிரிவு தமிழ் மொழியில் இருப்பதுபோல் வேறு எந்த மொழியிலும் இல்லை. நாடகத்தமி;ழ் படிப்படியாக வளர்ந்து சிறப்படைய பலர் ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளனர். அவர்களுள் சிறார் இலக்கியப் படைப்பாளரான பெரியசாமித் தூரன் குறிப்பிடத்தக்கவர். இவருடைய ‘பொன்னியின் தியாகம்’, என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ‘பொன்னியின் தியாகம்’ ‘சர்க்கரையின் கரும்பு’, ‘காதலின் பொய்’ ஆகிய நாடகங்கள் வழி வெளிப்படும் விழுமியங்கள் குறித்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**சிறார் இலக்கியம்**

சிறுவர் இலக்கியம் என்பது குழந்தைகள் படித்து மகிழும் வகையிலான இலக்கிய வடிவமாகும். பொழுது போக்கிற்கு மட்டுமல்லாமல் குழந்தைகளின் கற்பனைத்திறன், வாசிப்பு, புரிதலை வளர்ப்பதால், அவர்களின் வாழ்வில் முக்கியத்துவம் பெறுகிறது. நல்ல குணநலன்களையும், பழக்க வழக்கங்களையும், வீரத்தையும், விவேகத்தையும் இளமையில் எளிதாகக் குழந்தைகளுக்குக் கற்றுத்தருவது குழந்தை இலக்கியத்தின் முக்கியப் பணி. அனைத்து இலக்கியங்களும் கருவாகி உருவாவதற்கு அடிப்படையாக இருந்தது குழந்தை இலக்கியம்.

**பெரியசாமித் தூரன்**

தமிழ் மொழியில் குழந்தைகளுக்கான முதல் கலைக்களஞ்சியத்தை முதன்மை ஆசிரியராக

இருந்து தொகுத்தவர். ஈரோடு மாவட்டத்தில் வேலப்பக் கவுண்டர் - பாவாத்தாள் இணையருக்கு மகனாக 1948இல் பிறந்தார். சிறந்த ஆசிரியராகவும், இதழாசிரியராகவும் தொண்டாற்றியவர். மரபுக் கவிதைகள், வசன கவிதைகள், சிறார் இலக்கியம், கட்டுரைகள், சிறுகதைகள், அறிவியல் நூல்கள், பாரதி ஆய்வு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், நாடகம் போன்ற ஏராளமான இலக்கியங்களைப் படைத்து பல்வேறு விருதுகளைப் பெற்றவர். தமிழ் மொழியில் நவீன 'கலைக் களஞ்சியம்' உருவாகக் காரணமானவர். குழந்தைகளின் மனதில் நற்பண்புகளை விதைத்து அவர்களைப் பண்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதனால், தம் படைப்புகளில் தீமையை எதிர்த்துப் போராடும் துணிவு, உண்மை, உழைப்பின் உயர்வு, தாய்மொழிப் பற்று, கல்வியின் முக்கியத்துவம் ஆகிய கருத்துக்களை முதன்மைப் படுத்தியுள்ளார். இவரது நாடகங்கள் சிறுவர்களின் அறிவு, ஆற்றல், துணிவு, செயல்திறனுக்குச் சான்றாக அமைகின்றன.

**விழுமியங்கள்**

மக்கள் தங்கள் வாழ்வில் தொன்று தொட்டுப் பின்பற்றிய பல்வேறு அறநெறிகளைத் தம் சந்ததியினர் வழிவழியாய்ப் பின்பற்றுமாறு வலியுறுத்துவது விழுமியம் எனப்படும். மனிதன் தன் வாழ்வில் உளத்தூய்மை, சகிப்புத்தன்மை, அன்பு, அமைதி, ஈகை, சமாதானம், இரக்கம், அறம், வீரம், பணிவு, நேர்மை, நட்பு, தியாகம், ஒழுக்கம், பொய்கூறாமை, பொருளாசையின்மை, நாட்டுப்பற்று, கல்வி போன்ற வாழ்வியல் விழுமியங்களைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும். இவை மனித வாழ்வை உயர்த்தி மனிதன் மனிதனாகச் சிறப்புடன் வாழ உதவுவதோடு, மனிதனை மனிதப் பண்புள்ளவனாக மாற்றுகிறது.

**தியாக உணர்வு**

சங்ககால மன்னர்கள் அறநெறி தவறாது ஆட்சி புரிந்தனர். அதனால் மக்களும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

> **"வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்**
> **கோல் நோக்கி வாழும் குடி" 1**

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

வானம் வழங்கும் மழையை நம்பி உலக உயிர்கள் வாழ்வதுபோல் மன்னனின் செங்கோலை நம்பி குடிமக்கள் வாழ்கின்றனர். குடிமக்களை நன்முறையில் பேணி சிறந்த முறையில் ஆட்சி செய்து வந்த மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கடையேழு வள்ளல்களுள் ஒருவரான வேள்பாரி. அவன் பறம்பு மலையின் காவலன். வீரத்திலும் வள்ளன்மையிலும் அவனுக்கு நிகர் அவனே! பாரியின் புகழ் நாளும் வளர்வதைக் காணப்பொறாத மூவேந்தர்களும் அவனைப் போரில் வெல்லக் கருதி பறம்பு மலையை முற்றுகையிடுகின்றனா;. இந்நிகழ்வை மையமாக வைத்து எழுதப்பட்ட நாடகமே 'பொன்னியின் தியாகம். இந்த நாடகத்தில் இடம்பெறும் பாத்திரமான மாரன் என்னும் வீரன் பொன், பொருளுக்கு ஆசைப்பட்டு மன்னனுக்கு எதிராகச் செயல்படத் துணிந்து, பகை மன்னனிடம் தாய் நாட்டை விட்டுக் கொடுக்கும் துரோகச்

செயலில் ஈடுபடுகின்றான். இதைத் அந்த வீரனின் மனைவி பொன்னி தன் தாய் நாட்டிற்காகக் கணவனையே கொன்று தானும் உயிர்விட எண்ணுகிறாள். எதற்காக அப்பாவைக் கத்தியால் குத்தினீர்கள்? என்று கேட்ட மகனிடம்,

**"நாகா அவர் கோட்டை வாயிலைத்**
**திறந்து விட்டு சதி செய்ய நினைத்திருந்தார்.**
**அது எனக்குச் சம்மதமில்லாததால்**
**இந்தக் காரியம் செய்யத் துணிந்தேன்" (பொ.தி.ப.26)**

என்று கூறுகிd;றாs;. இக்கூற்றின் வழி பொன்னியின் தியாக உணர்வு வெளிப்படுகிறது. நாட்டிற்குத் துரோகம் செய்பவர்கள் யாராகயிருந்தாலும் கொன்று விடலாமா? என்று கேட்ட தன் மகனிடம் கொன்று விடலாம் என்று கூறியிருந்தாள். ஆதலாலும், தன் கணவனின் துரோகச் செயலை நாட்டு மக்கள் அறிய நேர்ந்தால், தன் மகனைத் துரோகியின் மகன் என்று அழைப்பார்களே என்று கருதியும் தன் உயிரினும் மேலான கணவனைக் கொன்று விடுகிறாள். தன் சுயநலத்தை ஒதுக்கித் தள்ளி தாய்நாட்டுப் பற்றின் காரணமாக தியாகச் செயல் புரிகிறாள்.

**வீரம்**

சமுதாயம் குழந்தையை அடிப்படையாகச் கொண்டே செயல்படுகிறது. குன்றுபோல் செல்வம் கொட்டிக் கிடப்பினும் மழலைச் செல்வம் இல்லையெனில் வாழ்வில் மகிழ்ச்சியில்லை. வாழ்ந்தும் பயனில்லை.

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்**
**நன் கலம் நன்மக்கட் பேறு"2**

என்று வள்ளுவர் மக்கட் செல்வத்தின் மாண்பினைக் குறிப்பிடுகிறார். மக்கள் தம் குழந்தைகள் வாழ்க்கையில் அறிவையும், துணிவையும், நற்பண்புகளையும் பெறவேண்டுமென்றும் அவை ஆழமாக மனதில் பதிய வேண்டுமென்றும் விரும்பினர். இதனைப் பிரதிபலிப்பது போல் 'பொன்னியின் தியாகம்' என்னும் நாடகம் குழந்தைகள் மனதில் வீரம் குறித்த உணர்வு, இளமையிலே வளர வேண்டும் என்னும் கருத்தைப் பதிவு செய்துள்ளது. பொன்னிக்கும் நாகனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலில் வீரம் வெளிப்படுவதைக் காணலாம். விளையாடச் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்த நாகன், தன் அன்னையிடம் போரில் எத்தனை பேர் வீழ்த்தப்பட்டிருப்பர்? மூவேந்தரும் பறம்பு மலையை விட்டு ஓடிப்போயிருப்பார்களா? என்று கேட்கிறான். பொன்னி அவனுக்குப் பதிலளித்துக் கொண்டே வீரத்தை அவனுள் விதைக்கிறாள். மன்னர்கள் போல் சண்டையிட்டு விளையாட அன்னையை அழைக்கின்றான். அன்னையைச் சேரநாட்டு அரசனாகவும் தன்னைப் பறம்பு நாட்டு வீரனாகவும் உருவகித்துக் கொண்டு சண்டையிடுவது போல் விளையாடுகின்றான்.

**"சேரா, உடனே என்னிடம் பணிந்து சரணடை. இல்லாவிட்டால்**
**நீ எங்கு சென்றாலும் உனது தலையை இந்த வாளுக்கு இரையாக்காமல் விடமாட்டேன்" (பொ.தி.ப.12)**

என்கிறான். இக்கூற்றிலிருந்து நாகனின் வீர உணர்வு வெளிப்படுவதை அறிய முடிகிறது.

'காதலின் பொய்' என்ற நாடகத்தில் இடம்பெறும் பாத்திரமான மருதமுத்து என்கிற ஆடுமேய்க்கும் இளைஞன், ஆங்கிலேயர் கையில் அகப்படாமல் மறைந்து வாழும் கட்டபொம்மனுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கருதி கும்பெனி வீரர் தலைவன் அவனிடம் கடுமையாக நடந்து கொண்டபோது மிடுக்காகப் பதில் அளிக்கின்றான். மருதமுத்து மணம் செய்து கொள்ளப்போகும் பெண் முன்னிலையில்,

**"உள்ளதை ஒளிக்காமல் சொல்லிடு, இல்லாப்**
**போனா நீ அந்தக் குட்டியைக் கலியாணம்**
**பண்ணிப் புளைக்க மாட்டாய்" (கா.பொ.ப.52)**

என்று குமபெனி வீரர் தலைவன் கூறியவுடன்

**"இந்தப் பேச்சிலே நான் மிரண்டுட**
**மாட்டேன்" (கா.பொ.ப.52)**

என்று பதில் கூறுகின்றான். இக்கூற்றிலிருந்து தன் உயிருக்கு ஆபத்து என்று தெரிந்தும் அஞ்சாமல் பதில் அளிக்கும் மருதமுத்துவின் வீர உணர்வு வெளிப்படுவதை அறிய முடிகிறது.

மருதமுத்துவை நினைத்து அழும் தெய்வானையிடம் கிழவி, தன் மகனைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று கூறுகிறாள். மேலும், நேற்று வரை என் மகன் ஆடு மேய்க்கிற பையன். இன்றைக்கு அவன் வீரன். அவன் இனிமேல் சிரஞ்சீவி என்று பெருமையுடன் கூறுகிறாள். இதன் வாயிலாக கிழவியின் வீர உணர்T வெளிப்படுவதை அறிய முடிகிறது.

**நாட்டுப்பற்று**

ஒருவர் தம் நாட்டின் மீது கொண்டுள்ள அளவில்லாத அன்பினை நாட்டுப்பற்று என்பர். எவ்வித அடக்குமுறைக்கும் கொடுங்கோன்மைக்கும் அஞ்சாது கடமையைப் பெரிதென எண்ணிச் செயல்படுதல் நாட்டுப்பற்று ஆகும்.

'பொன்னியின் தியாகம்; என்ற நாடகத்தில் இடம்பெறும் பாத்திரமான நாகன் தன் அன்னையிடம்,

**"நீ எதிரியாக இருந்தால் உன்னைக்**
**கொல்லலாமா? (பொ.தி.ப.12)**

என்று கேட்கிறான். அதற்குப் பொன்னி,

**"தந்தையும் தாயும் தாய் நாட்டிற்குத்**
**துரோகம் செய்தால் அவர்களையும் உனது**
**வாளுக்கு இரையாக்கலாம்" (பொ.தி.ப.12)**

என்று கூறுகிறாள்.

"காதலின் பொய்" என்ற நாடகத்தில் இடம்பெறும் மருதமுத்தவின் தாய் தன் மகன் கட்டபொம்மனைக் காட்டிக் கொடுக்காவிட்டால் உயிரை இழக்க நேரிடும் என்பதையும் கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்தால் பணம் கிடைக்கும் என்பதையும் அறிந்தும் இறுதிவரை எதனையும் வெளிப்படுத்தாமல் இருக்கிறாள்.

தனக்கு மருமகளாக வரப்போகும் தெய்வானை வருந்தும் பொழுது கவலைப்படாதே என்று கூறி,

**"அவனைப் போல ஆயிரம் ஆயிரம்**
**பேர் உயிர் கொடுத்தாதான் இந்த**
**தேசம் மறுபடியும் நம்ம கைக்கு**
**வரும்" (கா.பொ.g.59)**

என்று கூறுகிறாள். இதிலிருந்து கிழவியின் நாட்டுப்பற்று மிக்க நல்ல உள்ளம் புலனாகிறது.

**பொருளாசையின்மை**

மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யத் தேவைப்படுவதுதான் பொருட்செல்வம், பொருளை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இவ்வுலகில் பொருளாசையற்ற உள்ளங்களைக் காண்பது அரிது. தனக்கு உரிமையில்லாத பொருளின்மேல் ஆசை கொள்ளக்கூடாது என்ற பண்பட்ட உள்ளம் கொண்டோரும் இவ்வுலகில் உள்ளனர் என்பதை உணர்த்தும் வகையில் படைக்கப்பட்ட பாத்திரமே "காதலின் பொய்" என்ற நாடகத்தில் இடம்பெறும் கிழவி பாத்திரம். கட்டபொம்மனைப் பணத்திற்காகக் காட்டிக் கொடுத்த அரசர்களுக்கு முன்னால் இவள் உள்ளத்தால் உயர்ந்தவள். கும்பெனி வீரர் தலைவன் கிழவியிடம்,

**"கட்டபொம்மன் இருக்கிற இடத்தைச் சொன்னால் உனக்கு நிறையப் பணம் கிடைக்கும். நீயும் உன் மகனும் மருமகளும் சொகமா இருக்கலாம.; உனக்கு லட்சம் வராகன்இப்பவேகொடுக்கிறேன்." (கா.பொ.ப.54)**

என்று கூறுகிறான. ; அதற்குக் கிழவி,

**"லட்சம் வராகனா? அது என்னத்துக்கு? நாலு ஆட்டுக்குட்டியிருந்தா எனக்குப் போதும்" (கா.பொ.ப.55)**

என்கிறாள;. பொருளாசையற்ற கிழவியின் உள்ளம்

**"உற்ற பேராசை கருதி அறனொரூஉம்**
**ஒற்கம் இலாமை இனிது"3**

என்று இனியவை நாற்பது $றும் அறவழி செயல்படுவதை அறியமுடிகிறது. மனித மனமே அனைத்து விளைவுகளுக்கும் காரணம். மனம் பண்பட்டதாக விளங்கினால் சிறந்து வாழ முடியும் என்பதை வலியுறுத்தவே இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

**கல்வி**

அறியாமை இருள் அகற்றும் கல்வி மனித வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருள் வளத்தால் நாம் சிறக்க கல்வி பெருந்துணை புரிகிறது.

**"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடு அல்ல மற்றை யவை"4**

என்கிறார் வள்ளுவர். பொருட்செல்வம் காலத்தால் அழியக்கூடியது. கள்வர்களால் களவாடப்படக் கூடியது. கல்விச் செல்வமோ காலத்தால் அழியாது நிலைத்து நிற்பது. மனிதனைப் பண்புடையவனாக்குவது. "சர்க்கரையின் கரும்பு" என்ற நாடகத்தில் இடம்பெறும் சர்க்கரைத் தேவர்

புலமைச் சிறப்பால் பெற்று வந்த பொன்னையும் மணியையும் தன் பாட்டியிடம் ஒப்படைக்கின்றாh.; கள்வர்களிடமிருந்து பொருளைப் பhதுகாக்க எண்ணிய பாட்டி, அதனை வீட்டின் புறக்கடையில் புதைத்து வைக்க ஏற்பாடு செய்கிறாள். சர்க்கரைப் புலவர் வீட்டில் இல்லாத சமயத்தில் வந்த கள்வர்கள் பொருளில்லை ஏட்டைக் கொளுத்துவோம் என்கின்றனர். பாட்டி ஏடுகள் தான் விலைமதிப்பற்றது. பரிசுகள் எப்பொழுதும் கிடைக்கும் என்று கூறி கள்வர்களிடம் பரிசுப் பொருள்களை ஒப்படைக்கிறாள்.

**“பேரன் சர்க்கரைப் புலவன் இருக்கும்போது பரிசுக்குப்**
**பஞ்சமில்லை. பரிசில் கிடைக்காவிட்டாலும் போகிறது. இந்தக்**
**கவிதைகள் தரும் இன்பம் போதுமே”** **(ச.க.ப.48)**

என்று தன் மனதினை ஆற்றுப்படுத்துகின்றாள்.

இதன் வாயிலாக கல்வியால் கிடைத்த புலமை முன்பு பிற அழியும் செல்வம் பெரிதல்ல என்பது புலனாகிறது.

**முடிவுரை**

தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்த நாடகத் தமிழில் சிறுவர் நாடகங்கள் இன்றியமையாச் சிறப்பினை பெறுகின்றன. சிறுவர் இலக்கியம் படைத்து தமிழ்மொழிக்கு வளமை சேர்த்த பெரியசாமித் தூரன் அவர்கள் இளம் குழந்தைகளுக்கு நன்னெறி புகட்ட தம் படைப்பினை ஒரு கருவியாக்கியுள்ளாh.; பெற்றோர் குழந்தைகளுக்கு அறிவுரை பகன்று பண்புடையவர்களாக வளர்க்க வேண்டும். பெற்றோரிடமிருந்தே குழந்தைகள் நற்பண்புகளைக் கற்றுக் கொள்கின்றனர் என்பதை வலியுறுத்தும் நோக்கில் பாத்திரங்களை உலவவிட்டுள்ளார். குழந்தைகளின் உலகுக்குள் ஆசிரியரும் பெற்றோரும் சென்று விழுமியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதைத் தம் படைப்பின் வழி பதிவு செய்துள்ளது போற்றுதலுக்குரியது.

**அடிக்குறிப்புகள்**

1. திருக்குறள், பரிமேலழகர் (உ.ஆ), ப.எண்:234
2. திருக்குறள், பரிமேலழகர் (உ.ஆ), ப.எண்:40
3. இனியவை நாற்பது, வேங்கடசாமி நாடார். ந.மு., ப:77
4. திருக்குறள், பரிமேலழகர் (உ.ஆ), ப.எண்:179

**துணை நூற்பட்டியல்**

1. பெ.தூரன், பொன்னியின் தியாகம், முன்றாம் பதிப்பு அக் 1963,
பாரி நிலையம் 58 பிராட்வே, சென்னை – 1,
2. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், மு.ப.1992, பாரதி பதிப்பகம்,
108 c; தியாகராய நகர்
3. வேங்கடசாமி நாட்டார் ந.மு., இனியவை நாற்பது, மு.ப. 2000, சாரதா பதிப்பகம்